செ.வெ. எண்:743 நாள்: 12.12.2011

# செய்தி வெளியீடு

சமூகநீதியை நிலைநாட்டுவதில் முன்னோடியாக திகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மக்களின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக ஏராளமான திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள்.

இதன் அடிப்படையில், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ/ மாணவியருக்கு பள்ளிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், விடுதியில் தங்காமல் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு மாதம் ரூ.25/- வீதம் 10 மாதங்களுக்கும், 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு மாதம் ரூ.40/- வீதம் 10 மாதங்களுக்கும், 9ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு மாதம் ரூ.50/- வீதம் 10 மாதங்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

இதே போன்று விடுதியில் தங்கி 3ம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு மாதம் ரூ.200/- வீதம் 10 மாதங்களுக்கும், 9ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு மாணவ/ மாணவியர்களுக்கு மாதம் ரூ.250/- வீதம் 10 மாதங்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். இது தவிர, தனி மானியமாக ஆண்டொன்றுக்கு ரூ.500/- வழங்கப்படும்.

ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ/மாணவியர் இதனால் பயனடைவார்கள். இதற்கென, 11 கோடியே 32 லட்சம் ரூபாய் ஒப்பளிப்பு வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை.
நாள்: 12.12.2011